# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No. : S. T. C. No. 898/2024**

**Prosecution Witness : P. W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : தீபன் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 26/03/2026

Accused Present.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிரி தரப்பில்)**

எதிரி தான் வாங்கிய இடத்தில் வரவிடாமல் பள்ளம் தோண்டி என் தந்தை பிரச்சனை செய்ததற்கு எதிரி அவர் மீது பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். அந்த புகாரில் நடைபெற்ற விசாரணையில் மேற்கொண்டு பிரச்சனை எதுவும் செய்ய மாட்டேன் என்று என் தந்தை எழுதிக் கொடுத்து வந்துவிட்டார் என்றால், சரிதான். என் தந்தை தாக்கல் செய்த இந்த வழக்கிலும் அவர் இறந்த பின்பு நான் தாக்கல் செய்த பிரமாணத்திலும் எதிரி எந்த தேதியில், எந்த இடத்தில் வழக்கு காசோலையை கொடுத்தார் என்ற விவரம் காணப்படவில்லை என்றால், சரிதான். எதிரி என் தந்தைக்கு கொடுப்பதாக சொன்ன ரூ.8,50,000/- த்திற்கு ரூ.5 லட்சத்திற்கு மட்டுமே காசோலை வழக்கு போடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மீதமுள்ள ரூ.3,50,000/-த்திற்கு விளக்கம் எதுவும் சொல்லவில்லை என்றால், எதிரி ரூ.1,85,000/- கொடுத்துவிட்டார், மீதி தொகை கேட்கும் போது தான் காசோலை கொடுத்து பிரச்சனை ஏற்படுத்தினார். காசோலையில் என்ன தேதி உள்ளது என்றால், 31.01.2024 ஆகும். என் தந்தை அதை வங்கியில் எப்போது

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

தாக்கல் செய்தார் என்றால், 22.02.2024 ல் தாக்கல் செய்தார். அது Cross செய்து எதிரி கொடுத்தார். அதைப் போட்ட போது, பணமில்லை என்று திரும்பியது.

31.01.2024 முதல் 22.02.2024 வரையுள்ள தாமதத்திற்கு எதிரி தான் உறுதி கொடுத்து பணம் கொடுத்துவிட்டு, காசோலை திரும்ப பெறுவதாக சொன்னதால் ஆனது என்று தற்போது தான் முதல் முறையாக நான் சொல்கிறேன் அதை புகாரிலும் பிரமாணத்திலும் சொல்லவில்லை என்றால், சரிதான். வழக்கு புகாரில் நான் பிரிவு 138(b) பிரகாரம் 09.03.2024 ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக சொல்லியுள்ளேன். ஆனால் நான் சொன்னது போல் எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை என்றாலும், பதில் அறிவிப்பு மட்டுமே கொடுத்திருக்கிறேன் என்றாலும், சரிதான்.

எதிரி 09.03.2024 மற்றும் 04.04.2024 ல் ஆவடி மாநகர காவல் ஆணையாளரிடம் என் தந்தையின் மீது காசோலையை திருடியதாக குற்றம் சாட்டி புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால், அப்படி எந்த புகாரும் என் தந்தை மீது எதிரி கொடுக்கவில்லை. ரூ.5 லட்சம் எதிரி என் தந்தைக்கு சட்டப்பூர்வ கடனாக கொடுக்க வேண்டிய கடப்பாடு எதுவும் கிடையாது என்றால், சரியல்ல. என் தந்தை நிலத்தரகராக செயல்பட்டு, எங்கள் பகுதியில் அந்த நிலம் அமைந்திருப்பதால், எதிரியிடம் அதனை நில உரிமையாளர் மூலம் விற்றுவிட்டு, அதிக பணம் வேண்டியே எதிரியிடம் பிரச்சனை செய்து அந்த நிலத்திற்கு வரவிடாமல் தடுத்து, எதிரியிடமிருந்து அந்த காசோலையை திருடிக் கொண்டு அதை வைத்து எதிரி மீது என் தந்தை பொய் வழக்கு போட்டார் என்றால், சரியல்ல. அந்த பணத்தை பெறவே நான் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA